**இலங்கை சர்ட் (பிரைவேட்) லிமிடட் கம்பனி - 2024**

---------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை சர்ட் (பிரைவேட்) லிமிடட் கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் மத்திய அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுததும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து

வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| அ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் இன்போமேசன் கொமியுனிகேசன் டெக்னோலஜி ஏஜன்சி (பிரைவேட்) லிமிடட் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 40,215,928 மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவானது பெறவேண்டிய மீதி ரூபா. 40,215,928 நிலுவைத் தொகை தவறான கணக்கியல் பதிவாகக் கருதப்பட்டமையினால் அதனை ரத்துசெய்ய பரிந்துரைத்ததுடன், அறிக்கைகள் அடுத்துவரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. | குழுவினது அறிக்கைகமைவாக பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஆ) | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் காணப்படும் ரூபா. 4,599,330 பெறுமதியான வருமதியாளர் நிலுவைகள் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும்கூட வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் உள்ள வருமதியாளர் நிலுவைகள் குறித்து வருமதியாளர்களுக்கு தொடர் கடிதங்களை அனுப்புவதற்கும் செயற்திட்டப் பொறுப்பதிகாரிகளுடன் வருமதியாளர் மீளாய்வு கூட்டத்தினை நடத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூறப்பட்டது. | நிலுவையாகவுள்ள வருமதியாளர் நிலுவைகளை வசூலிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| இ) | ரூபா. 22,793,238 பெறுமதியான 30 வருமதியாளர் நிலுவைகளில், ரூபா. 12,605,240 பெறுமதியான பதினேழு வருமதியாளர் நிலுவைகள் மட்டுமே நிலுவை உறுதிப்படுத்தலிற்கு கோரப்பட்டிருந்தது ஆனால் ரூபா. 1,480,000 பெறுமதியான ஒரு வருமதியாளர் நிலுவை மட்டுமே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்துவதற்கு பற்றுச்சீட்டுகள் காணப்படுவதாக கூறப்பட்டது. | அனைத்து உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில், ரூபா. 86,221,166 பெறுமதியான 21 சென்மதியாளர் நிலுவைகளில், ரூபா. 81,515,324 பெறுமதியான ஐந்து சென்மதியாளர் நிலுவைகள் நிலுவை உறுதிப்படுத்தலிற்கு கோரப்பட்டிருந்தது ஆனால் ரூபா. 1,650,240 பெறுமதியான ஒரு சென்மதியாளர் நிலுவை மட்டுமே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்துவதற்கு பற்றுச்சீட்டுகள், விலைமனு ஆவணங்கள் காணப்படுவதாக கூறப்பட்டது. | அனைத்து உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|---|
| அ) | 2007ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டம் | | | |
| (i) | பிரிவு 116(1) | முந்தைய 10 ஆண்டுகளிற்குள் நடைபெற்ற அனைத்து பங்குதாரர் கூட்டங்கள் | கம்பனி சட்டத்தின் கீழ் அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டிய அனைத்து கூட்ட | கம்பனி சட்டத்தின்படி இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் அனைத்து இயக்குநர் கூட்டங்களின் அறிக்கைகளினையும் கம்பனி அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும். இருப்பினும், கம்பனி அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | அறிக்கைகள் மற்றும் ஏனைய பதிவுகளை முறையாக கையளிக்குமாறு நிறுவனச் செயலாளருக்கு எழுத்துப்பூர்வமாக முறையாகத் அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. | |
| (ii) | பிரிவு 131(1) மற்றும் (2) | பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெற்று 30 வேலை நாட்களுக்குள் வருடாந்த வருமான அறிக்கையை கம்பனி பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், 2014 முதல் வருடாந்த வருமான அறிக்கை கம்பனி பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி பதிவாளர் நாயகத்துடன் ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டதாகவும், இதன் போது 2013 முதல் 2020 வரையிலான காலகட்டத்திற்கான வருடாந்த வருமான அறிக்கைகளை நேரடி முறை மூலம் சமர்ப்பிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. அதன்படி, 2021 ஆம் ஆண்டு முதல், அனைத்து ஆவணச் சமர்ப்பிப்புகளும் இணைய முறை மூலம் செய்யப்பட வேண்டும். இந்தச் செயல்முறைக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரிக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, துல்லியத்தன்மையினை உறுதிசெய்வதற்காக தற்போது செயற்பாட்டுநடைமுறையில் உள்ளது. | கம்பனி சட்டத்தின்படி இணங்குதல் வேண்டும். |
| (iii) | பிரிவு 223(1) | கம்பனி இயக்குநர் சபை அல்லது செயலாளர்களில் ஏற்படும் மாற்றங்கள், மாற்றம் ஏற்பட்ட நாளிலிருந்து 20 வேலை நாட்களுக்குள் கம்பனி பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், பிப்ரவரி 28, 2020 க்குப் பின்னர் இயக்குநர் சபையில் ஏற்பட்ட மாற்றங்கள் கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் கம்பனி செயலாளரால் ஆன்லைனில் ஆவணங்களைத் வழங்கமுடியவில்லை என்று கூறப்பட்டது. | கம்பனி சட்டத்தின்படி இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ) | 1958ஆம் ஆண்டு 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் (ஈ.பி.எப்), பிரிவு 47 மற்றும் 1980ஆம் ஆண்டு 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டம் (ஈ.ரி.எப்), பிரிவு 44 | கம்பனி ஈ.பி.எப் மற்றும் ஈ.ரி.எப் ற்க்கான பங்களிப்புகளைக் கணக்கிடுகையில் தகுதியற்ற மருத்துவப் படி மற்றும் பயணப் படிகளினை உள்ளடக்கியுள்ளது. இதன் விளைவாக, 2022 - 2024 காலகட்டத்தில் ரூபா.2,024,797 தொகையான ஈ.பி.எப் மற்றும் ரூபா.506,199 தொகையான ஈ.ரி.எப் இனை கம்பனி மேலதிகமாக செலுத்தியுள்ளது. | தாய்கம்பனியினால் ஈ.பி.எப் மற்றும் ஈ.ரி.எப் கணிப்பீடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. | ஊழியர் சேமலாப நிதிய சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டதின்படி இணங்குதல் வேண்டும். |
| இ) | பொது முயற்சிகளின் 01/2021 ஆம் இலக்க 2021 நவம்பர் 16 அந் திகதிய சுற்றுநிருபம் மற்றும் 01/2021(iii)ஆம் இலக்க 2023செப்தெம்பர் 27ஆம் திகதிய மறுசீரமைக்கப்பட்ட சுற்றுநிருபம் | | | |
| (i) | செயற்பாட்டு கையேட்டு பிரிவு 2.3 | அனைத்து எஸ்.ஓ.ஈ களும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தமது சொந்த நிர்வாக மற்றும் நிதி கையேட்டை பின்பற்ற வேண்டும். இருப்பினும், கம்பனி அதற்கமைவாக செயற்பட்டிருக்கவில்லை. | நிர்வாக கையேடு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. நிதி கையேடு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படும். | செயற்பாட்டு கையேட்டின்படி இணங்குதல் வேண்டும். |
| (ii) | பிரிவு 3.2 | கம்பனிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் ஆளணி காணப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அனைத்து ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்படடிருந்தனர். | ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்கனவே முடிவுறுத்தப்பட்டிருப்பதுடன் அது ஏச்.ஆர் உப குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. | செயற்பாட்டு கையேட்டின்படி இணங்குதல் வேண்டும். |
| (iii) | பிரிவு 3.4 | கம்பனி ஒரு வாரிசுரிமைத் திட்டத்தை வைத்திருக்க வேண்டும், இருப்பினும், நிறுவனம் ஒரு | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைவாக (எஸ்.ஓ.ஆர்) வெற்றிகரமான | செயற்பாட்டு கையேட்டின்படி இணங்குதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெற்றிகரமான திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை. | திட்டம் தயாரிக்கப்படுமென கூறப்பட்டது. | வேண்டும். |
| (iv) | பிரிவு 3.8 | கம்பனி ஊழியர்களுக்கான தொடர்பாடல் வசதிகள் அரசாங்க சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதாக காணப்பட்டிருந்தது, இருப்பினும் அதற்கு மாறாக, மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் கம்பனி மாதாந்த கையடக்கத் தொலைபேசி பில்கள் கூட்டுமொத்தம் ரூபா.773,415 செலுத்தியிருந்தது. | இந்த சுற்றறிக்கையை கடைப்பிடிக்க தேவையான நகர்வுகளை இலங்கை சர்ட் மேற்கொள்ளுமென கூறப்பட்டது. | சுறறுநிருபத்தின்படி இணங்குதல் வேண்டும். |
| ஈ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவை | | | |
| (i) | தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் xii இன் பிரிவு 23.18 | அலுவலர்கள் தீவிற்கு வெளியே செலவிட்ட விடுமுறை விபரம் குறித்த கம்பனி தலைவரினால் மாதந்தோறும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்டுதல் வேண்டும். | குறித்த அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் எதிர்காலத்தில் அதற்கமைவாக செயற்படுவதாகவும் கூறப்பட்டது. | தாபனவிதிக்கோவையின் படி இணங்குதல் வேண்டும். |
| (ii) | தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் xv இன் பிரிவு 10.3 | நாட்டைவிட்டு புறப்படுகைக்கான விண்ணப்பமானது புறப்படுவதற்கு 10 நாட்களிற்கு முன்னதாக அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கவேண்டியிருப்பினும் அதற்கமைவாக இரு சந்தர்ப்பங்களில் நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | குறித்த அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் எதிர்காலத்தில் அதற்கமைவாக செயற்படுவதாகவும் கூறப்பட்டது. | தாபனவிதிக்கோவையின் படி இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 33,767,807 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,678,519 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 12,089,289 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. ரூபா. 20,402,045 ஏனைய வருமான அதிகரிப்பானது முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கம்பனிக்கு சுகாதாரம் மற்றும் மருத்துவக் காப்பீட்டை வழங்குவதற்காக ஏற்பட்ட செலவு ரூபா.2,334,035 மற்றும் ஊழியர்களுக்கான சுகாதாரம் மற்றும் மருத்துவபடிகள் மற்றும் பயணப் படிகள் செலவு கூட்டுமொத்தம் ரூபா.6,741,006 உரிய அங்கீகாரமில்லாது செலுத்தப்பட்டிருந்தது. | மருத்துவ காப்பீட்டுத் திட்டத்திற்கு ஏற்கனவே சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. இருப்பினும், 2024 நவம்பர் 17 முதல் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்திற்கு திறைசேரி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளினை மேற்கொள்ள முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் இல்லாது, இயக்குநர்கள் சபையின் அங்கீகாரத்துடன் 19 ஊழியர்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா.6,256,865 சம்பள உயர்வை கம்பனி மீளாய்வாண்டில் செலுத்தியுள்ளது. மேலும் கம்பனியினது அனைத்து ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படைளில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் இயக்குநர்கள் சபை இரண்டு இணை தகவல் பாதுகாப்பு பொறியாளர்களை தகவல் பாதுகாப்பு பொறியாளர்களாக 01 ஜனவரி 2024 முதல் அங்கீகரித்து பதவி உயர்வுவழங்கியிருந்தது. | இலங்கை சர்ட் இன் சம்பள அமைப்பு அதன் தாய் நிறுவனம் மற்றும் நிறுவன பங்குதாரரான ஐசிரிஏ இன் சம்பள அமைப்புக்கு விகிதாசாரமாக உருவாக்கப்பட்டது என்று கூறப்பட்டது. இந்த சம்பள அமைப்பு மற்றும் தொடர்புடைய சட்டப்பூர்வ கழிப்பனவுகள் குறித்த காலத்தில் ஐசிரிஏ இன் இயக்குநர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட அமைச்சரவை மற்றும் சபை அங்கீகாரத்திற்கு இணங்க, அந்த சம்பள அமைப்பு இலங்கை சர்ட் இனால் அதே முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டது. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| ரூபா. 410 மில்லியனிற்கு தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி பாதீடு மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் ரூபா. | பதில் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பெற்றுக்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகளிற்கமைவாதக செயல்நடவடிக்கைத் |

| | |
|---|---|
| 481.92 மில்லியனிற்கு மறுசீரமைக்கப்பட்டது. இருப்பினும் அதற்கமைவாக செயல்நடவடிக்கைத்திட்டம் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட திட்டம் மறுசீரமைக்கப்படவோ அங்கீகரிக்கப்படவோ இல்லை. | திட்டம் மாற்றியமைக்கப்படல் வேண்டும். |